UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# ஆற்றுப்படை கூறும் கலைஞர்களின் புலமை

**க. புவனா**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)
**முனைவர் க. காயத்ரி**
உதவிப்பேராசிரியர், நெறியாளர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை
அரசு கலைக் கல்லூரி, சி. முட்லூர், சிதம்பரம்

**ஆய்வுச்சுருக்கம்**

ஆற்றுப்படை இலக்கியங்கள் பண்டைத் தமிழரின் வாழ்க்கை, அரசியல், கொடை, புகழ், போர்த்திறம், கல்வி, கலை ஆகியவற்றை சுவைப்பட எடுத்துக் கூறுகின்றன. பண்டைத் தமிழரின் வாழ்வில் கலைகளும் கலைஞர்களும் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தனர். ஆற்றுப்படை நூல்கள் சிறந்த வழிகாட்டும் நூல்களாக அமைந்துள்ளன. “யான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறுக” என்ற பாரதியாரின் கொள்கையோடு மக்கள் வாழ்ந்துள்ளனர். சங்க இலக்கியத்தில் கலைஞர்கள் கருத்து சுதந்திரத்துடனும், ஓங்கிய ஒழுக்கத்துடனும் வழிகாட்டும் மாமனிதர்களாக விளங்கினர். வறுமையிலும், செம்மையைக் கடைப்பிடித்த கலைஞர்களின் வாழ்வியலை இக்கட்டுரை ஆராய்கின்றது.

**கலைச் சொற்கள்:** குடி, பாடினி, நெற்றி, கூத்தர், அரங்கம், விறலி, ஆடை, பாணர், பொருநர், பாண்சேரி

**முன்னுரை**

சங்க கால புலவர்கள் அறிவுச் சார்ந்த சமூகத்தில் வாழ்ந்தனர். தான் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெற வழிவகை செய்பவர்களாக திகழ்ந்தனர். கலைகள் வளர்ந்தோங்கிய நிலையிலிருந்தாலும் கலைஞர்களின் வாழ்வு வளமையாக இல்லை. வறுமையில் உழன்று சோற்றுக்கு அல்லற்படும் அவலவாழ்க்கையாக இருந்தது. அந்த வறுமையிலும் கலைஞர்கள் தங்களின் நிலைகளிலிருந்து பிறழாமல் செம்மையாக வாழ்ந்துள்ளனர் என்பதை இக்கட்டுரை வழி ஆராயப்படுகிறது.

**கலைஞன்**

கலை எவ்வளவு சிறந்ததாயினும் அது தோன்றுகின்ற விதம் மனிதனின் சக்தியில் அடங்கியுள்ளது. அந்த கலையைப் படைக்கும் சக்தி இயற்கையாக அமைவதாகும். அதனை எவரும் கற்றுக்கொடுக்க முடியாது. கலைஞன் மனத்தில் மறைந்து கிடக்கும் இச்சக்தி வெளிவரும்போது கலை உண்டாகிறது. அக்கலையின் வடிவமும் உட்பொருளும் கலைஞன் மனத்தின் ஆழத்திலிருந்தே வெளிப்படுகின்றன. கலைஞன் மனம் ஏனையோரின் மனத்தைக் காட்டிலும் சிறிது வேறுபட்டது. கலைஞன் ஒரு செயலையோ பொருளையோ காணும் போது அவன் மற்றவரிடமிருந்து வேறுபட்டு உணர்கிறான். பொருள்களை ஊடுருவி நிற்கும் அழகினை பருக வல்லவன் கவிஞன் ஆவான். இதனால் உலகம் சில சமயங்களில் அவனை வெறும் கனவு காண்கிறவன் என்றும் உலகியலுக்குப் புறம்பானவன் என்றும் கூறுகிறது. பெருங்கவி கீட்ஸ் என்பார், “கவிஞன் எதனை அழகு என்று பற்றுகிறானோ அது

*ISSN: 2320-4842 (Print)* *ISSN: 3049-2688 (Online)*

உண்மைப் பொருளாகவே இருக்கும்” என்கிறார்.

### சங்க இலக்கியத்தில் கலைஞர்கள்

சங்ககாலத் தமிழகத்தில் புலமை மதிக்கப் பட்டதால் புலவர்கள் பெருகினர். புலவர் களின் புகழ்ச்சியை மன்னர்கள் விரும்பிய மையால் அவர்களை மையமாகக் கொண்டு பல பாடல்கள் புனையப்பட்டன. மன்னர் களின் வீரமும் காதலும் ஈகைப்பண்பும் புலவர்களின் பாடல்களுக்குக் கருக்களாயின. அதன் காரணமாகவே சங்கப்பாடல்கள் வீரம், ஈகை, காதல் குறித்த பாடல்களாக விளங்கின. புலவர்களுக்குக் கருத்துச் சுதந்திரமும் மதிப்பும் இருந்தமையால், அவர் கள் தம் மனத்தில் பதிந்தவற்றை உணர்ச்சி மழுங்காமல் இயற்கைச் சூழலைப் பின்னணி யாகக் கொண்டு பாடல்களை இயற்றினர். சங்ககாலத்தில் இயற்றப்பட்ட பாடல்களின் எண்ணிக்கை அறிதற்கு இயலாதது. வெவ்வேறு இடங்களில் புலவர்கள் வாழ்ந்த தால் அவர்கள் பாடியபாடல்கள் பேணுத லின்றி நாளடைவில் சிதைந்து போயின. ஓலைச்சுவடிகளில் எழுதபட்ட பாடல்களுள் அழியாதவற்றைத் தொகுக்கும் பணி கி.பி. 2ஆம் நூற்றாண்டளவில் நிகழ்ந்தது. சில தொகுப்புகளுக்குத் தொகுத்தவர்களின் பெயர் கிடைத்துள்ளது. பலவற்றிற்குக் கிடைக்கவில்லை.

புலவர்களுக்குள்ளே காழ்ப்புணர்ச்சி காணப் படவில்லை. ஒருவரின் தேர்ந்த புலமையை மற்றவர் மதித்துப் போற்றினர். “திருந்து மொழி மோசி” என்று மோசிகீரனாரைப் பெருஞ்சித்திரனார் போற்றினார். மாறோக் கத்து நப்பசலையார் “பொய்யா நாவின் கபிலன்” என்று கபிலரைப் போற்றினார். புலமை மிக்கோரை அதே துறையைச் சார்ந்தோர் போற்றுதல் என்பது கல்வியலின் மேம்பாட்டினையும் கல்வியாளரின் நயத்தகு நாகரிகத்தையும் காட்டுவதாகும்.

புலவர் பெருமக்கள் வறுமையிலும் செம்மை யாகவும் மாண்புடனும் வாழ்ந்தனர். மாந்தரி டம் வேற்றுமை பாராட்டாது பெரருள் உடையவராக விளங்கினர். குமண வள்ளலி டம் பெற்று வந்த பரிசில் பொருள்களை மனைவியிடம் வழங்கி, “இன்னோர்க்கு என்னாது எல்லோர்க்கும் கொடுமதி” என்று பெருஞ்சித்திரனார் கூறியது இதற்கு ஒரு சான்றாகும்.

நட்பிற்கு இலக்கியமாகச் சங்ககாலப் புலவர் களின் வாழ்க்கை சுட்டப்படுகிறது. கோப் பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் நீத்தபோது அம்மன்னருடன் பிசிராந்தையார், பொத்தியார் முதலிய புலவர்களும் அவனைப் பிரிந்து வாழ்தலைப் பொறாது, வடக்கிருந்து உயிரை நீத்தனர்.

மன்னர்கள் போரிட்டுத் தாமும் தம் குடி மக்களும் அழிந்து கெடுதலைப் புலவர்கள் விரும்பவில்லை. மன்னர்களுக்கிடையேயும் மக்களிடையேயும் அமைதி நிலவுவதற்குப் பாடுபட்டனர். நெடுங்கிள்ளி, நலங்கிள்ளி என்ற உடன்பிறந்த சோழர்குலத்து மன்னர் களின் பகைமையை ஒழித்திடக் கோவூர் கிழார் முயன்றார்.

‘ஒருவீர் தோற்பினும் தோற்பது நும் குடியே’

என்ற உண்மையை எடுத்துரைத்தார். இவ்வாறான பல சான்றாண்மைப் பண்புகளையும் ஓங்கிய ஒழுக்கத்தையும் பெற்று மனித இனம் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் மாமனிதர்களாக சங்ககாலப் புலவர்கள் திகழ்ந்தனர்.

### ஆற்றுப்படை இலக்கியத்தில் கலைஞர்கள்

மன்னர்கள் புலவர்களைப் பெருமையுடன் போற்றினர். அரசியல் திட்டங்கள் வகுக்கும் போது புலவர்களின் கருத்துக்களையும், அறிவுரைகளையும் ஏற்றனர். தமது ஆட்சிச் சிறப்பினைப் புலவர்கள் புகழ்ந்து பாடுதல் பெறுதற்குரிய பெரும் பேறெனக் கருதினர். கல்வி பொதுவுடைமையாக இருந்ததால் புலவர்களும் ஒரு குறிப்பிட்ட இனத்தவராக இல்லாமல் சமூகத்தில் காணப்பட்ட பல்வேறு இனத்தையும் சார்ந்தவராக இருந்தனர். ஆற்றுப்படை இலக்கியங்கள், கலைஞர்கள் வள்ளல்களைப் புகழ்ந்துப்பாடி, பெருஞ் செல்வத்தைப் பரிசாகப் பெறுத லைக் கருவாகக் கொண்டவை. வள்ளல் களின் புகழாசையையும், கலைஞர்களின் வறுமையையும் பெரிதும் விவரிப்பன ஆற்றுப்படை இலக்கியங்களாகும்.

### பாணர்

பாணர் இசைக்கலையில் வல்லுநர். பல நரம்புகளை உடைய பெரிய யாழை இசைத்துப் பாடுபவர் ‘பெரும்பாணர்’ எனப் பட்டனர். சிறிய யாழை இசைத்துப் பாடுபவர் ‘சிறுபாணர்’ எனப்பட்டனர். இப்பாணர்கள் வள்ளல்களை நாடிச் சென்று பாடிப் பரிசில் பெற்றனர். வறுமை அவனை வாட்டும்போது அவன் பெற்ற கல்வியை இகழ்ந்து

பேசுவதாய் பெரும்பாணாற்றுப்படை,

**“கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்**

**புல்லென யாக்கைப் புலவுவாய்ப் பாண!”** (பெரு)

எனக் குறிப்பிடுகிறது.

**பாடினியர்**

இசையில் வல்ல மகளிர் பாடினியர் எனப்பட்டனர். பொருநராற்றுப்படையில் கரிகாலனிடம் பரிசில் பெறச் சென்ற பாடினியின் தோற்றம் விளக்கப்பட்டுள்ளது. அதனை,

**“அறல்போல் கூந்தல்இ பிறைபோல் திருநுதல்**

**கொலைவில் புருவத்துஇ கொழுங்கடை மழைக்கண்,**

**..............**

**பெடைமயில் உருவின் பெருந்தகு பாடினி”** (பொரு)

என்னும் அடிகளால் அறியலாம்.

**கூத்தர்**

பல இசைக்கருவிகளை இசைத்து நடனம் ஆடுபவர்கள் கூத்தர்கள். கூத்துகலைப் பற்றிய நூல்களைக் கற்று தேர்ந்தவர்களாக கூத்தர்கள் திகழ்ந்தனர். சங்ககாலத்தில் கூத்து கலையை வளர்த்த கலைவாணர்கள் கூத்தர் கள், ஆடுமகன், ஆடுகளமகன் என்றழைக்கப் பட்ட இவர்கள் நடனமாடிய அரங்கம், ஆடுகளம் எனப்பட்டது. விழாக்காலங்களில் இவர்கள் பலவகைக் கூத்துகளை ஆடினார் கள். பிறகாலங்களில் அரசர்கள், வள்ளல்கள் பாற்சென்று பாடி, ஆடிப் பரிசில் பெற்று மீண்டனர். சிலப்பதிகாரத்தில் மாதவி பதினொன்று வகையான கூத்தினை ஆடினாள் எனப் புகார்காண்டத்தில் இளங் கோவடிகள் பதிவு செய்துள்ளார். சிறுபாணாற்றுப் படையில் ஒய்மா நாட்டை ஆண்ட நல்லியக்கோடான் கூத்தரைப் புகழ்ந்து பாடியுள்ளான். இதனை,

**“பல்இயக் கோடியர் புரவலன் பேர்இசை”** (சிறு)

என்னும் அடியால் அறியலாம். மன்னர்கள் புகழ்ந்து பாடும் அளவிற்குக் கூத்துக் கலைஞர்கள் சமுதாயத்தில் நன்மதிப்பைப் பெற்றிருந்தனர் என்பதை இதன் மூலம் அறியலாம்.

**விறலியர்**

நடனக்கலையில் தேர்ச்சிப் பெற்றவள் விறலி. அவள் பொருநருடனும், பாணருடனும், கூத்தருடனும் சென்று தன் கலைத்திறனை வள்ளல்கள் மத்தியில் ஆடிக்காட்டிப் பரிசில் பெறுவது வழக்கம். இவர்கள் நடனமகள், விறலி, கூத்தி, ஆடுமகள், ஆடுகளமகள் என பிற பெயர்களிலும் அழைக்கப்பட்டனர்.

இக்கால நடிகையர் கண் கவரும் உடற் கட்டும் பேரழகும் பெற்றிருத்தல் போலவே சங்ககால விறலியரும் பெற்றிருந்தனர் என்பதை,

**“ஐதுவீழ் இகுபெயல் அழகுகொண்டு அருளி**
**நெய்கனிந்து இருளிய கதுப்பின் கதுப்பு என,**
**............ மடமான் நோக்கின் வாள்நுதல் விறலியர்”** (சிறு)

என்னும் சிறுபாணாற்றுப்படை அடிகளால் அறியலாம்.

**பொருநர்**

பொருநர் என்பவர் ஏர்களத்தும், போர்க் களத்தும் சென்று பாடும் கூத்தராவர். அவர் கள் இசைக்கருவிகளை இசைத்துப்பாடினார் கள். விழா நடக்கும் ஊர்களில் தங்கள் இசைத்திறனைக் காட்டி விழா முடிந்தவுடன் தங்கள் ஊர்களுக்குச் செல்வது பொருநரின் வழக்கமாகும். இதனை,

**“அறாஅ யாணர் அகன்தலைப் பேர்ஊர்,**
**சாறுகழி வழிநாள் சோறுநசை உறாஅது,**
**வேறுபுலம் முன்னிய விரகுஅறி பொருந”** (பொரு)

என்னும் பொருநராற்றுப்படை அடிகளால் அறியலாம்.

பொருநர் வள்ளல்களின் அரண்மனையில் வைகறையில் சென்று தங்கள் கிணைப் பறையையோ, பிற இசைக்கருவியையோ இசைத்து வள்ளலின் புகழைப் பாடுதல் வழக்கமாகும். இவர்களின் இசைக்கலை குறித்த நூல்களைக் கற்றவராகவும் விளங்கினர்.

**கலைஞர்களின் வாழ்க்கை முறை**

அறிவு சார்ந்த சமூகமாக வாழ்ந்த புலவர்களின் வாழ்க்கை வளமையானதாக அமையவில்லை. வறுமையில் உழன்ற புலவர்கள், அரசர்கள் வள்ளல்களிடம் சென்று அவர்களின் கொடைத்தன்மையைப் பாராட்டி, தம் சுற்றத்தார், மனைவி, மக்களின் துன்பத்தை எடுத்துரைத்து

அதனை நீக்குமாறு பாடியுள்ளனர். பாணனும் அவன் மனைவி விறலியும் காடும் மலையும் கடந்து சென்று, வள்ளல்களைக் கண்டு அவர்களைப் புகழ்ந்து பாணன் இசைக்கருவிகளை இசைத்து பாட விறலி அதற்கேற்ப நடனமாடி வள்ளல்களிடமிருந்து பரிசில் பெற்று வாழ்க்கையை நடத்தினர்.

கணவனும் மனைவியும் ஒற்றுமையாய் இருந்து விழாக்களிலும் தம் கலைத் திறனைக் காட்டி பொருள் பெற்றனர். இல்வாழ்க்கை நேரிய முறையில் நடை பெற்றதால் கலைகள் சங்க காலத்தில் நன்கு வளர்ச்சி பெற்றன.

கரிகாலன் தன்னைப் பாடி வந்த பொருநர்க்கு இழை போன வழி இது என்று காணவியலாத நுண்மையுடைய வேலைப் பாடு நிறைந்த பாம்பின் தோலை ஒத்த ஆடையை நல்கினான் என பொருநராற்றுப் படை குறிப்பிடுகிறது. இதனை,

**“நோக்குநுழை கல்லா நுண்மைய**
**பூக்கனிந்து**
**அரவுரி யன்ன அறுவை”** (பொரு)

என்னும் அடிகளால் அறியலாம்.

மன்னர்கள் பொருநர், கூத்தர், பாணர் என்னும் கலைவாணர்களை இன்முகத்துடன் வரவேற்று நல்லுடைகளையும் பலவகை சுவை பொருந்திய உணவுகளையும் கொடுத்து உபசரித்தனர். தொண்டை நாட்டு தலைவனான இளந்திரையன் அரண்மனை யில் வல்லோனால் ஆக்கப்பட்ட பல்சுவை உணவுகள் பாணர் பிள்ளைகளுக்குச் சிறிய வெள்ளிக்கலங்களிலும் பெரியவர்களுக்குப் பெரிய வெள்ளிக்கலங்களிலும் படைக்கப் பட்டன. அதனை,

**“கொடுவாள் கதுவிய வடுஆழ் நோன்கை**
**வல்லோன் அட்ட பல்ஊன் கொழுங்குறை**
**...........மங்குல் வானத்துத் திங்கள்**
**ஏய்க்கும்”** (பெரு)

என்னும் பெரும்பாணாற்றுப்படை வரிகளால் அறியலாம்.

மதுரையை அடுத்த வையையாற்றின் நீர்த்துறைகளின் அருகில் பூந்தோட்டங்கள் அமைந்திருந்தன. அவற்றினிடையே பெரும் பாணர் குடியிருப்பு இருந்தது என்றும் பாணர்குடியிருப்பில் பாடல் ஆடலால் ஓசை இடைவிடாது எழுந்தது என்றும் மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது. இதனை,

**“அவிர்அறல் வையைத் துறைதுறை தோறும்**
**பல்வேறு பூத்திரள் தண்டலை சுற்றி**
**அழுந்துபட்டிருந்த பெரும்பாண்**
**இருக்கையும்”** (மதுரை)

என்னும் அடிகளால் அறியலாம்.

நுண்ணிய வேலைப்பாடமைந்த அணிகலன் களை விறலியும், பாடினியும் அணிந்திருந்த னர் என்பதைப் பின்வரும் பாடலடிகளால் அறியலாம். சிறுபாணாற்றுப்படையில் விறலி தன் முன்கையில் தொடி அணிந்ததை,

“நெய்கனிந்து இருளிய கதுப்பின் கதுப்பு என” (சிறு) என்னும் அடிகளால் அறியலாம்.

நன்னனைக் காணச் சென்ற கூத்தருடன் இருந்த விறலியர் தாங்கள் அணிந்திருந்த அணிகலனின் தன்மையால் ‘இலங்குவளை விறலியர்’ என அழைக்கப்பட்டனர். இவ்விறலியர் தம் கைகளில் வளைகளையும் தொடியையும் அணிந்திருந்தனர். இதனை,

**“இலங்குவளை விறலியர் நிற்புறஞ்**
**சுற்றக்”** (மலைபடு)

என்னும் மலைபடுகடாம் அடியால் அறியலாம்.

**கலைஞர்களின் வறுமை நிலை**

பண்டைக் காலத்தில் கலைஞர்கள் வறுமை யின் கொடுமையில் சிக்கித் தவித்துள்ளனர். புலவர்கள் பசியை பகை என்றும், நோய் என்றும், துயரம் என்றும் பல பெயர்களில் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வறுமையைப் போக்கிய வள்ளல்களையும் அரசர்களையும் மருத்துவன், அருளாளன், மழை போன்றவன், தெப்பம் போன்றவன் என்றும் போற்றியுள்ளமையால் புலவர்களின் வறுமைத் துன்பத்தை அறிய முடிகிறது. சிறுபாணாற்றுப்படையில் வறியவனான கிணை வாசிப்பவன், அவன் மனைவி பசியால் வருந்துகின்றனர். சமைக்க உணவுப் பொருட்கள் இல்லை. அதனால் அவள் குப்பைக்கீரையை தன் நகங்களால் கிள்ளினாள். வீட்டில் உப்பின்மையால் அதை உப்பின்றியே வேகவைத்தாள். அதை தாங்கள் உண்பதை வெளியார் பார்த்தால் இழிவாகக் கருதுவர் என்ற எண்ணத்தால் வீட்டுக்கதவை தாழிட்டாள். பின்பு தன் வீட்டாருடன் தானும் இருந்து உண்டாள் எனக் குறிப்பிடுகிறது. இதனை,

**“வளைக்கை, கிளைமகள் வள்உகிர்க்**
**குறைத்த**

**குப்பை வேலை உப்புஇலி வெந்ததை
மடவோர் காட்சி நாணி, கடை அடைத்து,
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குஉடன்
மிசையும்"** (சிறு)

என்னும் அடிகளால் அறியலாம்.

**புலமையை மன்னர்கள் போற்றுதல்**

தமிழகத்தை ஆண்டு வந்த சேர, சோழ, பாண்டியர் என்ற முடியுடை வேந்தரும் பாரி, காரி, அதிகன் போன்ற சிற்றரசர்களும் தம்மை நாடி வந்த இயற்றமிழில் வல்ல பாணரையும், நாடகத்தமிழில் வல்ல கூத்தரை யும் மலர்ந்த முகத்துடன் வரவேற்றனர். அருகிலிருந்து உணவு அளித்தனர். உயர்ந்த ஆடைகளை வழங்கினர். அரண்மனையி லேயே பல நாட்கள் இருக்கச் செய்தனர். இறுதியில் வேண்டிய பரிசிலை நல்கி, பிரியா விடையளித்தனர்.

ஒய்மா நாட்டை ஆண்ட நல்லியக்கோடனது அரண்மனை வாயில் புலவர்க்கும் பொருநர்க்கும் பாணர்க்கும் கூத்தர்க்கும் அந்தணர்க்கும் தடையின்றித் திறந்துவிடப் பட்டது. அவர்கள் எந்த நேரத்திலும் தடையின்றிச் செல்ல வசதி அளிக்கப்பட்டது. இதனை,

**"பொருநர்க்கு ஆயினும் புலவர்க்கு
ஆயினும்
...........ஆடையா வாயில் அவன்அருங்
கடைகுறுகி"** (சிறு)

என்னும் அடிகள் விளக்கும்.

நன்னன் பகைவரை வென்று, அவரிடமிருந்து பெற்ற பேரணிகலன்களைப் புலவர், பாணர், கூத்தர் முதலியோர்க்கு வழங்கினான். மழை போல பொன்னை வாரி வழங்கினான். பருவம் பொய்யாத மேகம் போல மேன் மேலும் குறையாமல் வாரி வழங்கினான். இதனை மலைபடுகடாம்,

**"தொலையா நல்லிசை உலகமொடு நிற்பப்
............வீயாது சுரக்கும் அவன் நாள்மகிழ்
இருக்கையும்"** (மலைபடு)

என்னும் அடிகள் குறிப்பிடுகிறது.

**முடிவுரை**

சங்க காலத்தில் தோன்றிய ஆற்றுப்படை இலக்கியங்கள் தமிழரின் விருந்தோம்பல் மாண்பை மற்றும் சங்ககால மக்களின் பொருளாதாரநிலைகளையும், வறுமை நிலை யையும், மொழி ஆளுமையும் சங்க கால மன்னர்கள் புலவர்களை தங்களின் நாட்டின் அடையாளமாகவும், நாட்டில் நிகழும் மக்களுக்கு எதிரான இயற்கைச் சீற்றங்களை மற்றும் குற்றங்களை அறிந்து தீர்வு காணவே புலவர்களை (கலைஞர்களை) போற்றி வளர்த்து வந்தனர். புலவர்கள் பரிசில் பெறுவது மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல் மன்னன் செய்ய வேண்டிய செயல்பாடுகள் மற்றும் மக்களுக்குத் தேவையான உடைமைகளை மற்றும் உணவுசார் வாழ்வியலைப் பாதுகாத்தல், புலவர்களின் (கலைஞர்களின்) பாடல்கள் வழியே மன்னர்ளுக்கு புலவர்கள் உணர்த்தி வந்தனர். இவ்வகை கலைஞர்கள் இன்றைய காலக்கட்டத்தில் கலைத்திறன் இருந்தாலும் பொருளாதார ரீதியாக மிகவும் தொய்வு அடைந்துள்ளனர். அதை எடுத்துக்காட்டும் விதமாக இவ்வாய்வுக்கட்டுரை ஆராயப் பட்டுள்ளது.

**துணை நூற்பட்டியல்**

1. பத்துப்பாட்டு ஆராய்ச்சி, இராசமாணிக்க னார். மா, அவ்வை அச்சுக்கூடம், சென்னை.
2. பன்போக்குப் பார்வையில் தமிழ்ச் செம்மொழி தொகுதி i, ii, iii, ஐசக் சாமுவேல் நாயகம், த.ஏ, கல்லூரி ஆசிரியர் தமிழ்ச்சங்கம், நாகர்கோவில்-2, ஜனவரி - 2010.
3. தமிழ் இலக்கிய வரலாறு, சுப்பிரமணியன் ச.வெ, மணிவாசகர்பதிப்பகம், சென்னை – 600 108. ஆறாம் பதிப்பு – ஆகஸ்ட் 2007.
4. தமிழ் இலக்கிய வரலாறு, சுயம்பு பெ, பாரதி பதிப்பகம், திசையன்விளை – 627 657. மூன்றாம் பதிப்பு – மே 2008.
5. இலக்கியக்கலை, ஞானசம்பந்தன், அ.ச, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை -18 முதற்பதிப்பு 1999.
6. மலைபடுகடாம், நாகராஜன் வி, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.
7. பத்துப்பாட்டு பகுதி II, நாராயண வேலுப் பிள்ளை ம, முல்லை நிலையம், மண்ணடி, சென்னை முதற்பதிப்பு டிசம்பர் 1995
8. சங்க தமிழர் வாழ்வியல், நீலகண்ட பிள்ளை தா, செம்மூதாய் பதிப்பகம், சென்னை – 600 064. முதற்பதிப்பு ஏப்ரல் 1995